**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவினாசி**

**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ** L.L.M.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC) , அவினாசி**

**2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8ஆம் நாள் புதன்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், புரட்டாசி மாதம் 22ம் நாள்**

**EA No. 6/2025**
**இன்**
**நிறைவேற்று மனு எண். 11/2014**
**இன்**
**அசல் வழக்கு எண். 90/2007**

திரு.முருகேசன்

...மனுதாரர்/ எதிர்மனுதாரர் /
தீர்ப்புக்கடனாளி / பிரதிவாதி

/எதிர்/

1. A.P.சுப்பு (இறந்துவிட்டார்)
2. வள்ளியாத்தாள்
3. சந்திரன்
4. பாலன்

..எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் /
தீர்ப்பு பெற்றவர்கள் / வாதிகள்

இம்மனு கடந்த 17.09.2025ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சுதர்சன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ஆறுமுகம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**<u>உத்தரவு</u>**

கடந்த 19.07.2023ம் தேதி மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்திரவை ரத்து செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 21 விதி 106 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>:**

மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி. மனுதாரருக்கு எதிராக நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 19.07.2023ம் தேதியன்று மனுதாரருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை. எனவே மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்.</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது சட்டப்படியும், பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் கூறப்பட்டுள்ள விவரங்களை மனுதாரர் நிரூபிக்க வேண்டும். மனுதாரர் இம்மனுவை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளார். கடந்த 19.07.2023ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவு விபரம் மனுதாரருக்கு எப்போது தெரியவந்தது என்பதை மனுதாரர் இம்மனுவில் குறிப்பிடவில்லை. மனுதாரருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்ட விபரம், சிகிச்சை எடுத்த நாட்கள் விவரம் மனுவில் குறிப்பிடவில்லை. நிறைவேற்று மனுவை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு

செய்யப்படவில்லை.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், "மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

**5. <u>தீர்வு</u> :**

**5.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், கடந்த 19.07.2023ம் தேதியன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**5.2** எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களது வாதத்தில், நிறைவேற்று மனுவின் தீர்வை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், தகுந்த காலத்திற்குள் இம்மனுவை தாக்கல் செய்யாததாலும் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**5.3** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5.4** நிறைவேற்று மனுவில் மனுதாரர் / எதிர்மனுதாரர் முகவரியாக அவிநாசி தாலூக்கா, அவிநாசி டவுன், MRP காலனி, கதவு.எண்.1/107ல் வசிக்கும் பொன்னுசாமி மகன் P.முருகேசன் என்று குறிப்பிடப்பட்டு, மேற்படி முகவரிக்கு அறிவிப்பு சார்வு செய்ய இயலாததால் மனுதாரர் / எதிர்மனுதாரருக்கு எதிராக செய்தித்தாளில் அறிவிப்பு கொடுக்கப்பட்டு, 19.07.2023ம் தேதியன்று மனுதாரர் / எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**5.5** கடந்த 22.04.2025ம் தேதியன்று நீதிமன்ற அமீனா மனுதாரர் / எதிர்மனுதாரரை கைது செய்து இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது

மனுதாரர் / எதிர்மனுதாரரின் தகப்பனார் பெயரும், முகவரியும் நிறைவேற்று மனுவில் தவறாக உள்ளதாக மனுதாரர் / எதிர்மனுதாரர் தரப்பில் 10.06.2025ம் தேதியன்று குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.6** மனுதாரர் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள காரணம் ஏற்கத்தக்கதல்ல என்ற போதிலும், நிறைவேற்று மனுவில் மனுதாரர் / எதிர்மனுதாரரின் தகப்பனார் பெயரும், முகவரியும் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதாலும், மனுதாரர் / எதிர்மனுதாரருக்கு எதிராக நிறைவேற்று மனுவில் செய்தித்தாள் அறிவிப்பு கொடுக்கப்பட்டு அவருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், மனுதாரர் / எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையான மறுவாய்தா தேதியிலேயே இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாலும், இருதரப்பினர்களுக்கும் போதிய வாய்ப்பு அளித்து நிறைவேற்று மனுவில் தீர்வு காண்பது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்து, மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 08 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, 09.10.2025ம் நாள் பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.10.09 16:42:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
அவிநாசி .

<u>இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.10.09 16:42:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
அவிநாசி.